**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08– ம் நாள் வெள்ளிக்கிழமை
******

**இடைமனு எண்.2/2023–ல் அசல் வழக்கு எண்.413/2018**

ரெங்கநாதன் .....மனுதாரர்/1–ம் பிரதிவாதி

...எதிராக...

சண்முகராஜ் ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 05.12.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு R.கார்த்திக்ராஜன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு A.தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

வழக்கில் கடந்த 04–09–2019 தேதியிட்ட பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை நீக்கரவு செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை 9, விதி 7–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

(i) மனுதாரர் அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் மனுதாரர்/1–ம் பிரதிவாதியின் மீது எதிர்மனுதாரர்/வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/1–ம் பிரதிவாதி வேலை நிமித்தமாக வெளிநாட்டில் வேலை பார்த்து

வருகிறார். அதன் விவரம் மனுதாரர்/1-ம் பிரதிவாதி உறவினரான வாதிக்கு நன்கு தெரியும், தெரிந்திருந்தும் வாதி அதனை மறைத்து மனுதாரர்/1-ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளது மனுதாரர்/1-ம் பிரதிவாதி அப்பொழுது உள்ள முகவரிக்கு சம்மன் அனுப்பியும் நாளிதழ் விளம்பரம் செய்து மனுதாரர்/1-ம் பிரதிவாதி ஆஜராகாததால் மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 04-09-2019-ல் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு தற்பொழுது தான் தெரிய வருகின்றது. மேற்படி வழக்கில் மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு நல்ல கட்சியுள்ளது. அதனால் மேற்படி வழக்கில் மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்குரிய கட்சியை கேட்டு வழக்கை முடிவு செய்ய வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது.

(ii) எனவே மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு எதிராக 04-09-2019-ல் பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்டி உத்தரவை நீக்கரவு செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடவேண்டியது அவசியமும் நியாயமாக உள்ளது. இல்லையெனில் மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு ஏராள கஷ்ட நஷ்டமும் சம்பவிக்கும். எனவே வழக்கில் கடந்த 04-09-2019 தேதியிட்ட பிறப்பிக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை நீக்கரவு செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணை குறிப்பாணையின் சுருக்கம்.</u>**

(i) இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. இதில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகளை தவிர மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை மறுக்கப்படுகிறது. அவைகளை மனுதாரர்/பிரதிவாதி சட்டப்படிக்கு நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மேற்படி மனுதாரர்/வாதி அசல் வழக்கின் 1-ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கின் வாதியானவர் அவருக்கு பாகபாத்தியம் உள்ள தாவா சொத்தினை பொறுத்து மனுதாரர் பல பொய்யான ஆவணங்களை தயார் செய்து அவரது பெயரில் பதிவு

செய்து வைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தினை ரத்து செய்யக்கோரி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் கடந்த 04-09-2019 தேதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) பின்னர் அசல் வழக்கில் வாதி வழக்கு விசாரணையை ஆரம்பித்த நிலையில் இந்த மனுதாரர் 4 ஆண்டுகளுக்கு மேலாக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டு தற்போது மிகவும் காலதாமதமாக தன் மீது ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவினை நீக்கரவு செய்யக்கோருவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுவில் மனுதாரரால் கூறப்பட்டுள்ள காரணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லை. மேலும் இந்த மனுவானது அபரீமிதமான காலதாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். மேலும் மனுவானது வழக்கில் காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் நான்காண்டுகளுக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து

வருகிறது. மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கு எதிராக 04.09.2019 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்பு பரிசீலனையில் மனுதாரர்/ 1–ம் பிரதிவாதிக்கு நீதிமன்ற அழைப்பனை மாற்று முறையில் தான் சார்வு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/1 –ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜரின்மைக்காக மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும் மனுவின் தன்மை கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சணைக்கு தீர்வு காண்கிறது.

இறுதியில், இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> – இல்லை –
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> – இல்லை –

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.2/2023–ல்
அசல் வழக்கு எண்.413/2018
நாள்.08.12.2023.